



## பெண்களின் நிலையில் இருந்து சிந்தித்து உழைக்கும் இயக்கம் தி.மு.கழகம்!

# 2026 திராவிட மாடல் 2.0 - அரசில் - கழகத் தலைவர் மீண்டும் முதலமைச்சராக அனைவரும் சபதமேற்போம்!

### பல்லடத்தில் நடைபெற்ற மேற்கு மண்டல கழக மகளிர் மாநாட்டில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

பல்லடம், டிச. 31 –

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' எனும் தலைப்பில் நேற்று முன்தினம் (29.12.2025) நடைபெற்ற கழக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர், "பெண்களின் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்று அவர்களின் நிலையில் இருந்து சிந்தித்து உழைக்கிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, தமிழ்நாட்டு மகளிர் எப்போதுமே கழகத்தின் பக்கம்தான் உறுதியாக நிற்பார்கள். அதற்கு கடல் போல் கூடியிருக்கின்ற இந்த மாநாடே சாட்சி" என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

இன்றைக்கு பல்லடத்தில் கழகத்தின் மேற்கு மண்டல மாநாடு மிகுந்த எழுச்சியோடு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. நம் தலைவரின் வழிகாட்டுதலின் படி, இந்த மாநாட்டை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், இந்த மாநாட்டுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் முதலில் என் பாராட்டுதலையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 10 நாட்கள் புலம்பல்

கடந்த 14-ஆம் தேதி திருவண்ணாமலையில் தலைவரின் கட்டளையின் பேரில் இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். கிட்டத்தட்ட 1,30,000 இளைஞர்கள் அந்த சந்திப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஒரு மாநாடு போல அந்த நிகழ்ச்சி நடந்தது. நம் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களின் எழுச்சியைப் பார்த்து, 10 நாட்கள் சங்கி கூட்டமும் அடிமைக் கூட்டமும் புலம்பிக்கொண்டே இருந்தது. இன்றைக்கு பல்லடத்தில் கடல்போல் கூடியிருக்கின்ற மகளிர் கூட்டத்தைப் பார்த்தார்கள் என்றால், அந்த சங்கி கூட்டமும் அடிமைக் கூட்டமும் 10 நாட்கள் நிச்சயமாகத் தூங்கப்போவதில்லை.

நம் தலைவரின் நல்லாட்சிக்கும் தலைமைக்கும் மகளிர் மத்தியில் கிடைத்திருக்கின்ற வரவேற்பு, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மகளிருக்குமான உரிமைக் குரலாக நம் கழகத் தலைவர் அவர்களின் குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு ஒரேயொரு உதாரணத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### தைரியம் இருக்கிறதா?

இரண்டு நாட்களாக சமூக வலைதளங்களில் ஒரு வீடியோ அதிகமாகப் பகிரப்பட்டு வந்தது. ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர், முன்னாள் முதலமைச்சர் சகோதரி மெகபூபா முப்தி அவர்களின் பேட்டி ஒளிபரப்பானது. அந்த அம்மையார் அவர்கள் காஷ்மீரில் நடக்கின்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்கள். சகோதரி மெகபூபா முப்தி அவர்கள் தங்களின் தாய்மொழி காஷ்மீரியில் பதில் சொன்னார்கள். அப்போது ஒரு பத்திரிகையாளர் குறுக்கிட்டு, ``நீங்கள் ஏன் தாய்மொழியில் பேசுகிறீர்கள்? உருது மொழியில் பேசுங்கள்'' என்று கேள்வி கேட்டவுடன், அம்மையார் மெகபூபா முப்தி அவர்கள் சொன்ன வார்த்தை, ``என்னிடம் மொழிபெயர்ப்பு கேட்கிறீர்களே, உங்களுக்குத் தைரியம் இருந்தால் தமிழ்நாட்டிற்குச் சென்று என் சகோதரர் மு.க. ஸ்டாலினிடம் இதைக் கேட்க தைரியம் இருக்கிறதா?'' என்று கேட்டார்கள். மொழி உரிமை, மாநில உரிமை, பெண் உரிமை என்று வந்துவிட்டது என்றால், காஷ்மீரில் இருப்பவர்களுக்குக்கூட தமிழ்நாட்டில் இருக்கின்ற நம் முதலமைச்சரின் பெயர்தான் முதலில் நினைவுக்கு வரும். அப்படிப்பட்ட தலைவரை நாம் பெற்றுள்ளோம்.

### பெருமைமிகு மகளிரின் தொடர்ச்சி

101 ஆண்டுகளுக்கு முன்பு, 1924-ஆம் ஆண்டு கேரளா மாநிலம் வைக்கத்தில் கோயில் தெருக்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் நடப்பதற்கு அனுமதி கிடையாது என்ற நிலை இருந்தது. அந்த கொடுமையை எதிர்த்துப் போராடியவர் தந்தை பெரியார் அவர்கள். அந்தப் போராட்டத்தை நடத்திய பெரியாரை அப்போது கைது செய்தார்கள். பெரியாரைக் கைது செய்துவிட்டால், போராட்டம் நீர்த்துப் போய்விடும் என்று அப்போதிருந்த அரசாங்கம் நம்பியது. ஆனால், பெரியாரைக் கைது செய்தவுடன் அந்தப் போராட்டத்தைத் தந்தை பெரியாரின் மனைவி அன்னை நாகம்மையார் அவர்கள் கையில் எடுத்து அதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள். இப்படித் திராவிட இயக்கத்தின் தொடக்கம் முதலே இந்த இயக்கத்திற்காக ஏராளமான மகளிர் தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ளார்கள். அத்தகைய பெருமைமிகு மகளிரின் தொடர்ச்சியாகத்தான் இங்கு வந்துள்ள சகோதரிகள் உங்கள் அனைவரையும் நான் பார்க்கிறேன். தந்தை பெரியார் அவர்களுக்கு 'பெரியார்' என்று பட்டம் வழங்கியவர்கள் பெண்கள் தான்.



### பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும்' எனும் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாகக் காவல்துறையில் மகளிருக்குப் பணிவாய்ப்பு வழங்கினார்கள்.

அரசுத் தொடக்கப்பள்ளிகளில் மகளிர் மட்டுமே ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்கிற நிலையை ஏற்படுத்தினார். 1989-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை என்ற சட்டத்தைக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை இன்று ஒட்டுமொத்த இந்தியாவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

இந்தியாவிலேயே முதல் முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியதும் டாக்டர் கலைஞரின் ஆட்சியில்தான். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கலைஞரின் ஆட்சியில் கொடுக்கப்பட்டது. அதனை இன்று நம் முதலமைச்சர் அவர்கள் 50 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் வழியில் ஆட்சிக்கு வந்ததுமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான 'விடியல் பயணம்' திட்டத்திற்குத்தான். அந்தத் திட்டத்தில் 860 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாய் சேமிக்கிறார்கள்.

> **அடுத்த 100 நாட்கள், தமிழ்நாட்டு மக்கள் ஏன் உதயசூரியன் சின்னத்திற்கு, நம் தலைவர் தலைமையிலான கூட்டணியை வெற்றிபெற வைக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை, மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு இந்த மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு அடித்தளமாக அமையட்டும் என்று கேட்டுக்கொண்டு, வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!**

### காலை உணவுத் திட்டம்

தாய்மார்களும் இல்லத்தரசிகளும் தங்களது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும் போது, காலையிலேயே எழுந்து சமைப்பது அவர்களுக்கு ஒரு கூடுதல் சுமையாக இருந்தது. அந்தச் சுமையைக் குறைக்க, பள்ளிகளிலேயே 'காலை உணவு வழங்கும் திட்டத்தை' நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு 'புதுமைப்பெண்' திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல் ஒரு திட்டம், அதுதான் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'. இத்திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய போது, ``மாதந்தோறும் 1,000 ரூபாய் என்பது எங்களுடைய அண்ணன் எங்களுக்குக் கொடுக்கின்ற தாய் வீட்டுச் சீர்'' என்று பெண்கள் நெகிழ்ச்சியுடன் கூறினார்கள். இன்று ஒரு கோடியே 30 லட்சம் பெண்கள் உரிமைத் தொகை பெற்று வருகிறார்கள்.

இவ்வாறு மகளிருக்குப் பயனளிக்கும் பல திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்துச் செய்து வருகிறார். இது 'திராவிட மாடல் - பாகம் 1' மட்டும்தான்.

### 'திராவிட மாடல் 2.0'

'திராவிட மாடல் 2.0'-வில் பெண்களுக்கு மேலும் பயனளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை நம் கழகத் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்று உங்களுக்கு நிச்சயம் கொடுப்பார். ஆனால், இந்த வளர்ச்சி எதனையும் பிடிக்காமல் ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குத் தொடர்ந்து பல்வேறு இடையூறுகளைத் தந்துகொண்டிருக்கிறது.

நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமை என ஒட்டுமொத்தமாக, மாநில உரிமைகளைப் பறிக்கின்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள். இப்போது கூட மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கின்ற '100 நாள் வேலைத் திட்டத்தை' ஒன்றிய அரசு, சிதைத்துக் கொண்டிருக்கிறது. இவை அனைத்தையும் எதிர்த்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மட்டுமே குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில், குஜராத்தில் பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, ``நாங்கள் பீகாரில் வெற்றி பெற்றுவிட்டோம், அடுத்து எங்களுடைய இலக்கு தமிழ்நாடுதான்'' என்று கூறுகிறார். இங்கே திரண்டிருக்கும் லட்சக்கணக்கான மகளிர் முன்னிலையில் உறுதியாகச் சொல்கிறேன், சுயமரியாதை மிக்க மகளிர் படை இருக்கும்வரை, சங்கிகளால் தமிழ்நாட்டைத் தொட்டுக்கூட பார்க்க முடியாது.

### சமத்துவப் பூங்கா

தமிழ்நாடு என்பது தந்தை பெரியார் உருவாக்கிய சமத்துவப் பூங்கா. இங்கே அமைதியும், சகோதரத்துவமும், மத நல்லிணக்கமும் தான் என்றைக்கும் நிலைத்திருக்கும். இந்த அமைதிப் பூங்காவிற்குள் அத்துமீறி நுழைய வேண்டும் என்று பாசிச சக்திகள் நினைத்தால், அவர்களை எப்படி விரட்டியடிக்க வேண்டும் என்று நம்முடைய தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டின் அமைதியைச் சீர்குலைக்க ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பாசிச சக்திகளுக்கு அஞ்சி, கதவைத் திறந்துவிட நாங்கள் ஒன்றும் அண்ணா தி.மு.க. கிடையாது. இது அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம். கலைஞர் அவர்கள் வளர்த்தெடுத்த திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர் அவர்களால் வழிநடத்தப்படுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம். ஆகவே, பாசிஸ்டுகளின் தந்திரம் கழக உடன்பிறப்புகளிடம் பலிக்காது. பாசிஸ்டுகள் பழைய அடிமைகள், புதிய அடிமைகள் என எத்தனைப் பேரைக் கூட்டி வந்தாலும், தமிழ்நாடு எப்போதுமே டெல்லிக்கு 'அவுட் ஆப் கண்ட்ரோல்'தான்.

### அறிக்கை தயாரிக்கும் குழு

இன்று நம்முடைய தலைவர் அவர்கள், கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி அவர்கள் தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவை அமைத்துள்ளார்கள். அந்தக் குழு தமிழ்நாடு முழுவதும் பயணித்து, பெண்களின் தேவைகளையும் கோரிக்கைகளையும் உணர்ந்து, இந்தத் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க இருக்கிறார்கள். நம்முடைய கழகத்தில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைத்தவுடன், அதிமுக-விலும் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்த அடிமைகளைப் பார்த்துக் கேட்கிறேன், நீங்கள் எப்படியும் தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையை நகல் எடுக்கத்தான் போகிறீர்கள். அ.தி.மு.க. எவ்வளவுதான் இச்செயல்களைச் செய்தாலும் பொதுமக்கள், குறிப்பாக தமிழ்நாட்டு மகளிர் அவர்களை நம்புவதற்குத் தயாராக இல்லை. ஏனெனில், திராவிட முன்னேற்றக் கழகம்தான் எப்போதுமே 'சொல்வதைச் செய்யும் அரசு, செய்வதைச் சொல்லும் அரசு'.

பெண்களின் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்று அவர்களின் நிலையில் இருந்து சிந்தித்து உழைக்கிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, தமிழ்நாட்டு மகளிர் எப்போதுமே கழகத்தின் பக்கம்தான் உறுதியாக நிற்பார்கள். அதற்கு கடல்போல் கூடியிருக்கின்ற இந்த மாநாடே சாட்சி.

### எடுத்துச் சொல்லுங்கள்

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் கழக அரசு அமைய, இங்கே இருக்கும் மகளிர் உங்களது ஆதரவையும் உழைப்பையும் வழங்க வேண்டும். நீங்கள் நம்முடைய அரசின் திட்டங்களையும் கழகத்தின் சாதனைகளையும் உங்களது அண்டை வீட்டாரிடமும் நண்பர்களிடமும் எடுத்துச் சொல்லுங்கள். குறிப்பாக, எஸ்.ஐ.ஆர் (S.I.R) திட்டத்தால் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஒரு கோடி வாக்குகள் நீக்கப்பட்டுள்ளன. வரைவு வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் இருக்கிறதா என்று சரிபாருங்கள்.

உங்கள் பெயர் மட்டுமல்லாது, உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் பெயர்கள் இருக்கின்றனவா என்பதையும் உறுதி செய்யுங்கள். ஒருவேளை இல்லையெனில், நம் கழக பி.எல்.ஏ-2 (BLA-2) முகவர்கள் மூலமாகப் பெயர்களைச் சேர்க்க விண்ணப்பம் அளியுங்கள். ஜனவரி 18-ஆம் தேதி வரை கால அவகாசம் உள்ளது. தகுதியான ஒரு வாக்காளரின் பெயர் கூட விடுபட்டுவிடக் கூடாது.

குறிப்பாக, மகளிர், உங்களின் ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியமானது. உங்கள் வாக்கு, உங்களது உரிமை. 2026 தேர்தலில் அடிமைகளையும் பாசிஸ்டுகளையும் மீண்டும் நாம் விரட்டியடிக்க வேண்டும். ஏழாவது முறையாகக் கழகம் ஆட்சி அமைக்கவும், தொடர்ந்து இரண்டாவது முறையாகத் தலைவர் அவர்களை முதலமைச்சர் ஆக்கவும், இங்கு வந்துள்ள மகளிர் நீங்கள் அனைவரும் ஒரு சபதம் எடுத்தாக வேண்டும்.

அடுத்த 100 நாட்கள், தமிழ்நாட்டு மக்கள் ஏன் உதயசூரியன் சின்னத்திற்கு, நம் தலைவர் தலைமையிலான கூட்டணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை, மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு இந்த மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு அடித்தளமாக அமையட்டும் என்று கேட்டுக்கொண்டு, வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்